என்ன ஜென்மங்கள் நீங்கள் / நாங்கள்

இடம்: கிளிநொச்சியில் ஒரு மண்டபம்

காலம் சமாதானம் கண்ணாமூச்சி ஆடிய, வந்தவர் கள் பத்திரமாகத் திரும்பிச் செல்ல முடிந்த ஒரு வருடம் மேடையில் இயக்குனர் பாரதிராஜா உரையாற்றிக் கொண்டிருக்கிறார். ஆக்ரோசமான பேச்சு. அனல் வார்த்தைகளில் பறக்கிறது. அமைதியாக உட்கார்ந்திருக் கிறது மக்கட் கூட்டம். மேடையில் பேசும் போது முன்னிருக்கும் மக்கட் கூட்டத்தை கற்களாக உருவகப் படுத்தி கொள்ளச் சொல்வதுண்டு. இங்கு கற்களே மக்களாக இருப்பது போன்ற தோற்றம்.

கால்மணி நேரம் கடக்கிறது. அரைமணி நேரம்? முக்கால் மணி நேரம் இதற்கு மேல் பாரதிராஜாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லைப் போலும்.

'என்ன ஜென்மங்களய்யா நீங்க.. நான் ஒருத்தன் இங்கே பேசிக்கிட்டே இருக்கிறேன். யாராவது கை தட்டினீர்களா?' என அவர் தன் ஆதங்கத்தைக் கொட்டி விட்டார்.

இதில் பாரதிராஜாவின் தவறொன்றும் இல்லை. தமிழ் நாட்டு மேடையொன்றில் என் இனிய தமிழ் மக்களே என அவர் ஆரம்பிக்கும் போதே விசில் பறக்கும். பேச்சினிடை இடையே கை தட்டுவதற்கென்றே அவரும் இடைவெளி விட வேண்டியிருந்திருக்கும்.

கிளிநொச்சியில் நிலைமை தலைகீழாக இருந்தது. அங்கிருந்தவர்களை உணர்ச்சியற்ற ஜடங்கள் என பாரதிராஜா நினைத்திருக்கவும் கூடும்.

இந்தச் சம்பவத்தை நினைவு படுத்தி இலங்கைத் தமிழர்கள் உணர்ச்சியற்றவர்களா என அகிலனிடம் கேட்டேன். இந்தக் கேள்வி இப்போ ரொம்ப முக்கியம் என அகிலன் நினைத்திருக்கக் கூடும். வெற்றுப் பேச்சுக் களுக்கெல்லாம் நாங்கள் உணர்ச்சி வசப்படுவதில்லை யென பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம் என்றார் அவர். மற்றும்படி உண்மையென்னவென்றால் ஆக்ரோச மானதும் வீரம் கொப்பளித்து குதித்தோடும் வகையிலா னதுமான இவ்வாறான மேடைப் பேச்சுக்கள் திராவிட இயக்கங்களினது வருகையோடு தமிழகத்தில் ஒரு அரசியல் கலாசாராமாகி விட்டன. அந்த மக்கள் அதற்குள் பழக்கப் படுத்தப் பட்டு விட்டனர். புரட்சிகரக் கருத்துக்கள் காலம் காலமாக அனல் தெறிக்கும் பேச்சுக்களுடாகவே ஊட்டப் பட்டன அன்றி புரட்சிகரமான செயற்பாடுகள் மூலமாக அல்ல.

கொஞ்சக் காலத்திற்கு முன்பு விஜய் டி ராஜேந்தர் குமுதம்.கொம்மில் விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசியிருந்ததைக் கேட்ட போது எனக்கு ஈரக்குலையே நடுங்கியது. புலிகளின் பரப்புரைக் கூட்டங்களில் கூட அப்படி யாரும் பேசி நான் கேட்டதில்லை. அப்போது யாரோ நகைச்சுவைக்குச் சொன்னது நினைவுக்கு வருகிறது. ராஜேந்தரின் உரையை பிரபாகரன் கேட்டால் அடுத்த கணமே சண்டையைத் தொடங்கிடுவார் (அப்போது யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தது)

நானும் சும்மா நினைத்துப் பார்த்தேன். டி ராஜேந்தரைப் போலவே பிரபாகரன் பேசினால் எப்படியிருக்கும்? நல்ல வேளையாக காலம் அவ்வாறில்லாமல் கவனித்துக் கொண்டது.

பாரதிராஜா நம் மக்களுக்காக படம் செய்யவில்லை பாலு மகேந்திரா செய்யவில்லை என்ற ஒரு புறு புறுப்பு நம்மில் சிலருக்கு உண்டு. இதனை நினைவுபடுத்திக் கொண்டே சொல்ல விழைகிறேன்.

டென்மார்க்கில் இருந்து ஈழத்தமிழர் சிலரின் தயாரிப் பில் உருவான இளம்புயல் என்ற படத்தின் இசை வெளியீடு சென்னையில் அண்மையில் நடந்தது. அதன் ஒளித் துண்டுகளை பார்க்கக் கிடைத்தது. அந்தப் படத்தை நான் பார்க்கவில்லை. ஆனால் அவர்கள் தயாரித்த பூக்கள் என்ற சினிமாவினை இடையில் கண்டபடி திட்டிக் கொண்டே எழுந்து செல்லும் வரை பார்த்தேன்.

ஹீரோயிசம் பாய்ந்தோடும் இளைஞர்கள் அவர் களுக்கு பயந்தோடும் வில்லன்ஸ் அப்புறம் காதலிக்கவும் பாடல்களுக்கும் ஒரு பெண் கொஞ்சம் துப்பாக்கிகள் என நீளும் கதை அது. அந்தப் பெண் வெள்ளைக் காரப் பெண். வெளிநாடுகளில் கமெராவும் கணணியும் கிடைத் தால் தயாராகும் நம்மவரின் மூன்றாம்தரப் படங்களில் கதாநாயகிகள் பெரும்பாலும் வேற்று இன அழகிகளாகத் தான் இருக்கிறார்கள். இதனை நான் தொடர்ச்சியாகக் கவனித்திருக்கிறேன். இதைப் பற்றி கனடாவில் படமெடுத் துத் திரியும் நண்பரிடம் கேட்டிருந்தேன். அவர் நடித்திருந்த ஒரு படத்தில் (அவரது முதலாவது படத்திற்கு நிகழ்ந்த சோகம் சுவாரசியமானது. படத்தின் பாடல்கள் வெளியிட்ட பிறகு பெரும்பாலும் படப்பிடிப்புகள் நிறைவடைந்த பின்னர் இயக்குனருடனான வீட்டுச் சண்டையில் இயக்கு னரின் மனைவி படத்தின் மூலப் பிரதிகளை தீ மூட்டிக் கொழுத்திவிட்டாராம். அத்தோடுபடம்ப்ளாப்) கதாநாயகி கானா நாட்டைச் சேர்ந்தவராயிருந்தார். ஏனெனில் நெருக்கமான காட்சிகளில் நமது இலங்கைத் தமிழ் பெண் களை ஈடுபடுத்துவது நமது கலாசாரத்திற்கு ஒவ்வாதாம். இந்தக் கணத்தில் என் வாயில் வருவதை எழுதினால் அது ஒரு பேப்பரில் ***** என்றவாறு இருக்கும்.

மேற்சொன்ன பூக்கள் திரைப்படக் குழு தயாரிக்கும் படம் இளம்புயல். இயக்குனர் தயாரிப்பாளராகவும் இசை யமைப்பாளர் கதாநாயகனாகவும் நடிக்கும்? குடும்பப் படம். (குடும்பப் படம் என்றால் குடும்ப உறுப்பினர்களே தயாரிக்கும் படம்) இசை வெளியீட்டு விழாவில் அமீர் ஆர் பி சௌத்ரி உட்பட சில திரை பிரமுகர்கள் வந்திருந்தார் கள். தயாரிப்பாளர் தனது உரையில் இலங்கையில் தமிழர் களின் போராட்டத்திற்கு சிங்கள இராணுவம் காரண மில்லை. தமிழ்நாட்டுதிரைப்படங்கள் தான் காரணம் எனச் சொல்லி விட்டு ஒரு லுக் விட்டார். பார்வையாளர்களை யோசிக்க வைக்கிறாரோ என்னவோ?

பிறகு வீரபாண்டிய கட்டப்பொம்மனையும் மனோகரா வையும் இன்ன பிறவையும் பார்த்துத்தான் நாங்கள் போராட்ட குணம் கொண்டோம் என்றார். நல்ல வேளை இந்த வரிசையில் போக்கிரி குருவி வீராசாமி படங்களைச் சேர்க்காமல் விட்டார். தமிழ் சினிமாவில் நுழைந்துவிட்டார். இனி இப்படியெல்லாம் பேசித்தானே தீர்க்க வேண்டும். அவர் தேவை அவருக்கு. அதை விட்டு விடுவோம்.

அந்நிகழ்வில் அமீரின் பேச்சுத்தான் கவனத்திற்குரியது. அமீர் சொல்கிறார். நாயகிகளுக்குப் பின்னால் ஓடித் திரியும் நாயகர்களைக் கொண்ட தமிழ் சினிமாவை கொஞ்சங் கொஞ்சமாக மாற்ற என்னைப் போன்றவர்கள் முயற்சிக்கிறோம். ஆனால் நீங்கள் திரும்பவும் நாயகி யைத் துரத்துவது மரத்தைச் சுற்றிப் பாடுவது மாதிரியான ஜிகினா காலத்திற்கு செல்வது கவலை தருகிறது.

அந்த நிகழ்வில் வைத்து அமீர் ஈழத்து மக்களில் வலியை சினிமாவில் பதிவு செய்வேன் என்றார். அவ்வாறு செய்யவில்லையானாலும் அவரை எந்த ஈழத்துக் கொம்ப னும் கேள்வி கேட்க முடியாது. தயாரிக்கும் வசதியும் இயக்கும் வசதியும் இசையமைக்கும் வசதியும் நடிக்கும் வசதியும் பெற்ற எங்களாலேயே வலியைப் பதிவு செய்ய வக்கில்லை. இந்த லட்சணத்தில் அமீரும் பாரதிராஜாவும் பாலுமகேந்திராவும் வந்து பதிவு செய்ய வேண்டுமா?

என்ன ஜென்மங்கள் என பாரதிராஜாவே கூறியிருந்த போதும் அது இப்பதிவின் இரண்டாவது பத்திக்கான தலைப்பாகவே நான் கொள்கின்றேன்.

- சயந்தன்

பூசாரிகளை நோக்கி ஒரு அறைகூவல்!

கடந்த சில மாதங்களிற்கு முன்பு ஒரு பேப்பரில் 'மந்திரங்கள்' பற்றி ஒரு சிறு கட்டுரை எழுதியிருந்தேன். தமிழர்களின் விழாக்களில் சொல்லப்படும் வடமொழி மந்திரங்கள் எவ்வளவு தூரம் ஆபாசமும் அருவருப்பும் கொண்டவை என்பதை அதில் விளக்கியிருந்தேன்.

இந்த வடமொழி மந்திரங்களை மேலும் ஆராய்ந்து அதை ஒரு தொடராகவும் சில இணையத் தளங்களில் எழுதியிருந்தேன். அண்மையில் அதை ஒரு சிறு நூலாகவும் ஜேர்மனியில் வெளியிட்டிருந்தேன். இந்த நூலினைப் படித்த சில தீவிர மதவாதிகள் என்னை ஒரு பகிரங்க விவாதத்திற்கு வரும்படி அழைத்திருந்தார்கள்.

ஜேர்மனியில் உள்ள இந்து ஆலயங்களில் பூசை செய்கின்ற பல பூசாரிகள் விவாதத்திற்கு வருவார்கள் என்றும், எனக்கு அவர்கள் விளக்கம் தருவார்கள் என்றும் அவர்கள் எனக்கு அறியத் தந்திருந்தார்கள். அவர்களுடைய சவாலை நான் ஏற்றுக் கொண்டேன். பூசாரிகள் தங்கள் 'பொன்னான' நேரத்தை ஒதுக்கி விவாதத்தில் கலந்து கொள்வதற்காக விவாதத்திற்கான நாளும் இடமும் ஒரு மாதத்திற்கு முன்பே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கடந்த 7.09.08 ஞாயிற்றுக் கிழமை அன்று ஜேர்மனியில் உள்ள டோட்முண்ட் நகரில் விவாதம் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. சரியான நேரத்திற்கு நான் சென்றிருந்தேன். எந்த ஒரு பூசாரியும் அங்கு வரவில்லை. இந்து மதத்தைப் பற்றி எள்ளளவு அறிவு கூட இல்லாத சிலர் அங்கு வந்து என்னுடன் அடாவடித்தனமாக நடக்க முற்பட்டார்கள். அனைத்தையும் பொறுத்துக் கொண்டு பூசாரிகளின் வருகைக்காக நான் காத்திருந்தேன்.

ஒரு மணித்தியாலம் தாமதமாக 'ஜெயந்திநாதசர்மா' என்கின்ற ஒரே ஒரு பூசாரி வந்தார். ஆனால் அவரால் என்னுடன் விவாதம் செய்ய முடியவில்லை. மந்திரங்களின் அர்த்தத்தை தன்னால் விளங்கப்படுத்த முடியாது என்பதை மறைமுகமாக ஒத்துக் கொண்ட அவர் அதற்கு தம்மிடம் வேறு ஆட்கள் இருப்பதாகவும், அந்த 'அறிஞர்கள்' அனைவரும் விரைவில் எனக்கு விளக்கத்தை தருவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் அவர் தன க்கு வேலை இருப்பதாகக் கூறிவிட்டு சென்று விட்டார்.

ஏழாம் திகதி அன்று அனைத்து ஆலய பூசாரிகளும் என்னுடன் விவாதம் செய்து மந்திரங்கள் பற்றிய 'புனிதமான(?)' விளக்கத்தை எனக்கு தருவார்கள் என்று கூறியதால்தான் நான் அன்றைக்கு அங்கு சென்றிருந்தேன். ஆனால் அங்கே வந்த ஒரேயொரு பூசாரியான ஜெயந்திநாதசர்மாவோ இன்னொரு நாள் விளக்கத்தை தருவதாக சொல்லி விட்டு ஓடி விட்டார்.

ஜெயந்திநாதசர்மா சென்ற பின்பும் என்னுடன் ஒரு சிலர் அடாவடித்தனமாக நடந்து கொண்டார்கள். அடியாட்கள் போன்று அவர்களின் நடத்தை இருந்தது. என்னை பேசவிடாது தடுப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

ஆனால் ஒரு சிலர் ஆரோக்கியமான முறையில் தமது கருத்துக்களை முன்வைத்தார்கள். அவர்களுடன் நான் நடத்திய நீண்ட உரையாடலிற்குப் பின்பு அவர்களாகவே ஒரு தீர்மானத்தை முன்வைத்தார்கள். அதன்படி ஒரு ஆண்டு கால எல்லைக்குள் ஜேர்மனியில் நடைபெறும் ஆலய வழிபாடு, திருமணங்கள் உட்பட தமிழர் நிகழ்வுகள் அனைத்தும் தமிழில் நடைபெறு வதற்கு தாம் ஏற்பாடு செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள். என்னுடைய நோக்கமும் விருப்பமும் அதுவாகவே இருந்தது.

இது உண்மையில் நல்ல ஒரு திருப்பமாக அமைந்தது. இந்து மதத்திற்கு ஆதரவாக வாதாட வந்தவர்களே இந்தத் திட்டத்தை முன்வைத்தது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயம். இவர்களின் இந்த முயற்சிக்கு என்னால் முடிந்த ஒத்துழைப்பை வழங்குவதாக நான் வாக்குறுதி அளித்திருக்கிறேன். ஆனால் இங்கே உள்ள பூசாரிகளை மீறி இவர்களால் வெற்றி பெற முடியுமா என்பது இதில் உள்ள மிகப் பெரிய கேள்வி.

இந்தப் பத்திரிகையில் இப்பொழுது இதை எழுதுவதன் மூலம் இரண்டு விடயங்களை பதிவு செய்ய நினைக்கின்றேன். முதலாவது ஜேர்மனியில் டோட்முண்ட் நகரில் கூடிய தமிழர்கள் ஒரு ஆண்டுக்குள் அனைத்து ஆலயங்கள், திருமணங்கள் போன்றவற்றில் தமிழைக் கொண்டு வருவதற்கு முடிவெடுத்துள்ளார்கள் என்பது.

மற்றது ஜெயந்திசர்மா எனக்கு அளித்த வாக்குறுதி. இந்து மத அறிஞர்கள் ஒன்று கூடி பொது இடத்தில் பகிரங்கமாக என்னுடன் விவாதித்து என்னுடைய மந்திரங்கள் பற்றிய நூலுக்கு பதில் தருவார்கள் என்பது. இந்த வாக்குறுதியை இவர்கள் மறந்து விடக் கூடாது என்பதற்காக நான் இந்தப் பூசாரிகளை நோக்கி பகிரங்கமான சவாலை விடுகின்றேன்.

மந்திரங்கள் பற்றியும் அதன் பின்புலம் பற்றியும் நான் எழுதியவை மிகச் சரியானவை. இதை எங்கேயும் எந்த மேடையிலும் வந்து சொல்வதற்கு நான் தயார். இந்து மதம் பற்றி எந்தக் கொம்பனுடன் வேண்டுமென்றாலும் விவாதம் செய்வதற்கு நான் தயார். இது என்னுடைய பகிரங்கமான அறை கூவல்.

- வி.சபேசன்